# அருப்புக்கோட்டை நகராட்சி

**பிலவ வருடம் ஆடி மாதம் நாள் : 19.07.2021 திங்கள் கிழமை மாலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :– S.முகம்மது சாகுல் ஹமீது M.E.,தனி அலுவலர்**

**பொருள் 1 :** இந்நகராட்சி பொது நிதியின் கீழ் 2008–2009 பிரிவு 1, 2010–2011பிரிவு 2, 2012–2013 பிரிவு 2,2013–2014 பிரிவு 3,2014–2015–பிரிவு1, வருட வைப்புத்தொகை நிலுவை கேட்பு பதிவேடு மற்றும் குடிநீர்பிரிவில் கீழ் 2013–2014 பிரிவு 2, வருட வைப்புத்தொகை மேற்படி பதிவேட்டில் உள்ள தொகைகளை வழஙகக்கோரி ஒப்பந்ததாரரால் விண்ணப்பம் வரப்பெற்றது. எனவே மனுதாரர் கோரியுள்ள கீழ்க்கண்ட தொகைகைளை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | வருடம் | வேலையின் பெயர் | தொகை | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 2008–09 | நகராட்சி அலுவலக கட்டிடம் கட்டும்பணி | 50000 | எஸ்.ஹர்சவர்த்தனன் |
| 2 | 2011–12 | டெலிபோன்ரோடு சிமெண்ட் கான்கீரீட் பணிகள் (With held 5%) | 41670 | |
| 3 | 2013–14 | சிறப்பு சாலை திட்டம் சிப்பம் 2 | 214850 | |
| | | **மொத்தம்** | **306520** | |
| 4 | 2013–14 | அடி குழாய் பணி வார்டு 1,8,17,21,25 | 9185 | எ.பி.மோகன்குமார் |
| 5 | 2012–13 | தானியஙகி மின் சுவிட்சுகள் பொருத்துவது (FSD 1%) | 20000 | எஸ்.எஸ்.எலக்ட்ரிகல்ஸ் |
| 6 | 2013–14 | தானியஙகி மின் சுவிட்சுகள் பொருத்துவது (T- Dep 1%) | 10000 | |
| 7 | 2013–14 | நேதாஜி சாலையில் மின் கோபுரம் அமைப்பத்தற்கான டெண்டர் டெபாசிட் (T- Dep 1%) | 10000 | |
| 8 | 2013–14 | நேதாஜி சாலையில் டி எஸ்.விளக்குகள் அமைக்கும் பணி (FSD 1%) | 3800 | |
| | | **மொத்தம்** | **43800** | |
| 9 | 2008–09 | பேருந்து நிலையம் பராமரிப்பு பணி | 3000 | எஸ்.அம்சாகனி |
| 10 | 2008–09 | பராமரிப்பு பணி | 4000 | |
| 11 | 2008–09 | Storm water drain VIII Street | 1900 | |
| 12 | 2008–09 | காரியம் தனுஷ்கோடி தெரு, கமுனிட்டி ஹால் | 6600 | |
| 13 | 2009–10 | ஆணையாளர் குடியிருப்பு பராமரிப்பு பணி | 1800 | |
| | | **மொத்தம்** | **17300** | |
| 14 | 2008–09 | மினிபவர் பம்ப் வேலை (T- Dep 1%) | 2450 | எஸ்.சௌந்தராஜன் |
| 15 | 2008–09 | மினிபவர் பம்ப் வேலை (FSD 1%) | 1600 | |
| | | **மொத்தம்** | **4050** | |
| 16 | 2008–09 | அடிகுழாய், சிறிய பைப் வேலை வார்டு எண்.4,9,21,28,35 (T- Dep 1%) | 2130 | எஸ்.சுந்தரமூர்த்தி |
| 17 | 2008–09 | அடிகுழாய், சிறிய பைப் வேலை வார்டு எண்.4,9,21,28,35 (FSD 1%) | 2130 | |
| 18 | 2008–10 | அடிகுழாய் வேலை 4,9,18,21,24 (FSD 1%) | 1920 | |
| 19 | 2009–10 | அடிகுழாய் வேலை 4,9,18,21,24 (T- Dep 1%) | 1920 | |
| | | **மொத்தம்** | **8100** | |
| | | மொத்தம் | 388955 | |

<u>அலுவலகக்குறிப்பு.</u>

மேற்படி வருடத்தில் உள்ள தொகைகளை காலங்கடந்த நிலுவைகளாக கருதி வழங்குவது தொடர்பாக தணிக்கை தடை பத்தி எழுப்பப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி தொகைகள் காலங்கடந்த இனஙகளுக்கு எடுத்துச் செல்ல வில்லை. எனவே ஒப்பந்ததரரால் கோரப்பட்ட தொகையை வழஙகலாம்

ந.க.எண்.4294/2020/பி2

<u>**தீர்மானம் :**</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>**தீர்மான எண்.1263**</u>

**பொருள் 2:** அருப்புக்கோட்டை நகராட்சியில் வருவாய் உதவியாளர்களாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு.சஙகரப்பன் மற்றும திரு.சையது அகமது ஆகியகோர் தஙகளுக்கு ஐந்தாவது ஊதியக்குழு நிலுவைத் தொகை மற்றும் அதற்கான வட்டித் தொகையினை வழஙகாதது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்கள் முறையே **10234/2021** மற்றும் **10236/2021**க்கு நகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராவதற்கும் மற்றும் வாதாடுவதற்குமான செலவினத் தொகை வழக்கு ஒன்றிற்கு ரூ.**9000/–** வீதம் இரு வழக்கிற்கும் சேர்த்து ரூ.**18,000/–** ஐ திரு.என்.திலீப்குமார், வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை அவர்களுக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :–**</u>

மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.3383/2020/பி3

<u>**தீர்மானம் :**</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>**தீர்மான எண்.1264**</u>

**பொருள் 3:** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனஙகளான பேருந்து நுழைவுக் கட்டணம் மற்றும் ஆடு அறுக்குமிடத்திற்கான கட்டணம் ஆகியவற்றிற்கு **2021–2024**ம் ஆண்டிற்கு மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் யாரும் ஏலம் கோரவில்லை. எனவே மேற்படி இனஙகளுக்கு துறை மூலம் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி இனஙகளுக்கு துறை மூலம் வசூல் செய்வதற்கு தேவையான இரசீது புத்தகஙகள் தற்போது இருப்பில் இல்லாததாலும் மேற்படி இனஙகளுக்கு மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியினை சம்பந்தப்பட்ட குத்தகைதாரர்களிடம் ஒப்டைக்கும் காலம் வரை துறை மூலம் வசூல் செய்வதற்கும் மற்றும் தொடர்ந்து வசூல் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு ஸ்ரீ மீனாட்சி பிரிண்டர்ஸ் நிறுவனத்தின் மூலம் இரசீது புத்தகஙகளை அச்சடிப்பதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :–**</u>

1. மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. மேற்படி வசூல் பணியின் அவசர அவசியம் கருதி ஆணையரின் முன்அனுமதி பெற்று ஸ்ரீ மீனாட்சி பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழஙகியமைக்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.10714/2014/அ1

<u>**தீர்மானம் :**</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>**தீர்மான எண்.1265**</u>

**பொருள் 4:** அருப்புக்கோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் துப்புரவு பணியாளராகப் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக **30.06.2021** அன்று ஓய்வுபெற்ற திருமதி.மாரியம்மாள்/பெருமாள் அவர்களுக்கு சிறப்பு சேமநலநிதி அரசு மானியத் தொகை ரூ.**10000/–** வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :–**</u>

மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.8583/2021/பி3

<u>**தீர்மானம் :**</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1266**

**பொருள் 5:** அருப்புக்கோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் துப்புரவு பணியாளராகப் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2021 அன்று ஓய்வுபெற்ற திருமதி.காளியம்மாள்/பாண்டியன் அவர்களுக்கு சிறப்பு சேமநலநிதி அரசு மானியத் தொகை ரூ.10000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.8532/2021/பி3

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1267**

**பொருள் 6:** அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனங்களுக்கு 01.04.2021 முதல் 31.03.2022 முடிய காலத்திற்குரிய ஆண்டு சாலை வரி மற்றும் பசுமை வரியை அருப்புக்கோட்டை போக்குவரத்து துறை அலுவலகத்திற்கு செலுத்துவதற்கான செலவுத்தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.2728/2019/எச்2

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1268**

**பொருள் 7:** அருப்புக்கோட்டை நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைக்காக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நடப்பாண்டில் செய்திதாள்கள் மூலம் விளம்பரம் வெளியிடப்பட்டது. மேற்படி பொது சுகாதார அவசர அவசியம் கருதி செய்திதாள்கள் மூலம் மக்கள் விழிப்புணர்வு விளம்பரங்கள் வெளியிடப்பட்டதற்கு உரிய உத்தேச செலவு தொகை ரூ.75000/–க்கு (எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3064/2021/எச்1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1269**

**பொருள் 8:** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு E பிளாக் 4, டி.எஸ்.எண்.10/1பி (பழைய சர்வே எண் 46/1பாகம்) ல் 2.86 ஏக்கர் (11574.00சமீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு அரசாணை எண்கள் 78,172 H & UD நாள்.04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்தக்கோரி திருமதி.S.செல்வகுமாரி என்பவர் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் விருதுநகர் அவர்களால் ம.வ.(மு)/ந.ஊ.து.இ (விருமா) எண் 20/2021 நாள் 01.07.2021ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளார். மேற்படி அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்தில் உள்ள பூங்கா மற்றும் சாலைகளை அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 3373/2021 நாள் 17.06.2021ல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் விருதுநகர் அவர்கள் வழியாக நகராட்சிக்கு மனுதாரரால் தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் பூங்கா இடத்தினை நகராட்சி ஏற்று நகராட்சி அசையாச்சொத்து பதிவேட்டில் பதிவு செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.8869/2021/எப்1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1270**

பொருள் 9: அருப்புக்கோட்டை நகராட்சி 2019–2020 ஆம் ஆண்டுக்கான தணிக்கைக் கட்டணம் ரூ.97622/–ஐ உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, விருதுநகர் அவர்களின் கடித எண் 11/அ2/2021 நாள் 28.06.2021 அவர்களுக்கு உரிய அரசு கணக்கில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.874/2020/பி2

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1271**

பொருள் 10 : நகராட்சிகளில் 20 ஆண்டுகாலம் மாசற்ற முறையில் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு ''தஙகப்பதக்கம்'' வழஙக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.24817/ஜே3/2020 நாள் 13.07.2021ல் பரிந்துறை செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில் இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்காணும் வாக ஓட்டுநர்களுக்கும் ''தஙகப்பதக்கம்'' வழஙக பரிந்துறைக்கப்பட்டுள்ளது.

1. திரு.மா.பால்முருகன் – ஓட்டுநர் – பொது சுகாதாரப்பிரிவு
2. திரு.எஸ்.சாகுல்ஹமீது – ஓட்டுநர் – பொறியியல் பிரிவு
3. திரு.எஸ்.மாரிமுத்து – ஓட்டுநர் – பொறியியல் பிரிவு

மேற்படி வாகன ஓட்டுநர்களுக்கு ''தஙகப்பதக்கம்'' வழஙகுவதற்கான செலவினஙகளை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க மேற்படி கடிதத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்படி எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை அண்ணாசாலை, சென்னை அவர்களிடமிருந்து பெறுவதற்கும் அதற்கான செலவு தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.5227/2020/சி1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1272**

பொருள் 11: அருப்புக்கோட்டை நகராட்சி சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு ஜீலை 2020 முதல் மார்ச் 2021 வரை GST தாக்கல் செய்த வகைக்கு திரு.A.சரவணன் GST ஆலோசகர் அவர்களுக்கு ரூ.9000/– (ஒன்பதாயிரம்) வழஙக மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் ஒப்புதல் வழஙகலாம். ந.க.எண்.3747/2021/பி2

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1273**

பொருள்12: அருப்புக்கோட்டை நகராட்சி சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு 2020 – 2021ம் நிதியாண்டிற்கான வருமானவரி கணக்குகள் தாக்கல் செய்த வகைக்கு ரூ.15,000/– (பதினைந்தாயிரம் மட்டும்)ஐ வருமானவரி ஆலோசகர் திரு.M.குமாரசாமி அவர்களுக்கு வழஙக மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் ஒப்புதல் வழஙகலாம். ந.க.எண்.3747/2020/பி2

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1274**

பொருள் 13: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 T.R.V.சாலையில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம் செல்லும் வழியில் உள்ள 11 மின்கம்பஙகளில் புதியதாக 11 (எண்ணம்) தெருவிளக்கு அமைப்பதற்கான திட்ட மதிப்பீடு தொகை ரூ.79520/–, ரூ.22370/–, ரூ.76010/– ஆக மொத்தம் ரூ.1,77,900/–யை வருவாய் நிதியில் இருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து நாள்தோறும் பொது மக்கள் ஆரம்பசுகாதார நிலையத்திற்கு மருத்துவத்திற்காக பகல் மற்றும் இரவு நேரங்களில் வருவதாலும், குறிப்பாக மகப்பேற்றிகாக இரவு நேரங்களில் பெண்கள் அதிக அளவு வருவதாலும், மேற்படி சாலையானது இந்நகரில் விரிவாக்க பகுதியாக உருவாகிவருவதாலும் தெருவிளக்கின் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.6529/2019/இ2

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1275**

**பொருள்14:** அருப்புக்கோட்டை நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள வாகன எண் TN67AJ2135 ஸ்கார்பியோ, TN67A7339 குடிநீர் வாகனம், TN 67 B 8965 குடிநீர் வாகனங்கள் 90000 கிலோ மீட்டருக்கு ஓடியதால் டயர்கள் தேய்மானம் அடைந்து விட்டதால் புதியதாக டயர்களை அங்கீகாரம் பெற்ற Manickam Company (Firm) நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. அங்கீகாரம் பெற்ற நிறுவனமான மாணிக்கம் கம்பெனி (Firm) மூலம் வாங்கவும் அதற்கான செலவு தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசியம் கருதி முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 8290/2021/இ2

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1276**

**பொருள்15:** அருப்புக்கோட்டை நகராட்சியில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள பழைய பொருட்களை ஏலம் விடுவதற்கு 02.07.2021ல் அன்று ஏலம் கோரப்பட்டது. ஏலம் கோரியவர்கள் விபரம் கீழ்கண்டவாறு

| வ. எண் | பொருள் | அரசு மதிப்பு தொகை | திரு.செந்தில் மதுரை | K.கந்தசாமி, அருப்புக்கோட்டை | வீரக்குமார் பந்தல்குடி அருப்புக் கோட்டை | சரவரணக்குமார் காரியாபட்டி |
|---|---|---|---|---|---|---|
| 1 | தகரம் | 12.00 | 0.00 | 15.00 | 13.00 | 12.00 |
| 2 | பிளாஸ்டிக் | 12.00 | 12.00 | 14.00 | 0.00 | 13.00 |
| 3 | இரும்பு | 19.00 | 0.00 | 21.00 | 19.00 | 20.00 |
| 4 | காயல் புதியது | 700.00 | 720.00 | 750.00 | 700.00 | 730.00 |
| 5 | காயல் பழையது | 400.00 | 400.00 | 450.00 | 410.00 | 430.00 |

கோரப்பட்ட நான்கு ஏலக்கேள்விகளில் அரசு மதிப்புத்தொகையை விட அதிகமாக திரு.K.கந்தசாமி, அருப்புக்கோட்டை என்பவர் ஏலம் கோரியுள்ளார். அதன்படி ஏலம் விடப்படும் பொருள் மற்றும் விலைவிகிதம் கீழ்கண்டவாறு

| Sl. No. | Material Description | Qty | Kg | Price | Amount Rs. |
|---|---|---|---|---|---|
| 1. | Dumper Placer Bin | 38 | 3829 | 15 | 57435 |
| 2. | Chair | 67 | 150 | 15 | 2250 |
| 3. | Chair | 67 | 50 | 21 | 1050 |
| 4. | 11/4 G.I. Pipe | 54 | 378 | 21 | 7938 |
| 5. | Hand Pump Stand | 53 | 689 | 21 | 14469 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | Hand Pump Mouth | 96 | 288 | 21 | 6048 |
| 7. | Hand Pump Headset | 54 | 540 | 21 | 11340 |
| 8. | Hand Pump Cylinder | 129 | 580 | 21 | 12180 |
| 9. | Tri Cycle | 2 | 164 | 21 | 3444 |
| 10. | 18” CI Pipe | 3 | 490 | 21 | 10290 |
| 11. | 3” Column Pipe | 1 | 20 | 21 | 420 |
| 12. | Sintex tank 1000 ltr | 8 | 70 | 14 | 980 |
| 13. | Sintex tank 2000 ltr | 2 | 17 | 14 | 238 |
| 14. | Sintex tank 5000 ltr | 1 | 9 | 14 | 126 |
| 15. | 1 to 0.5 HP motor | 50 | | 750 | 37500 |
| 16. | 1 to 0.5 HP motor | 11 | | 450 | 4950 |
| 17. | 1.5 HP monoblock motor | 13 | | 450 | 5850 |
| | **Total** | | | | **176508** |

<u>அலுவலககுறிப்பு :</u>

1. அதிகபட்ச ஏலத்தொகை கோரிய திரு.K.கந்தசாமி என்பவரது ஏலக்கேள்வியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட அதிகபட்ச ஏலக்கேள்வியின் அடிப்படையில் மொத்த பொருட்களின் ஏலத்தொகை ரூ.176508/—யை இவ்வலுவலக கருவூலத்தில் செலுத்தும்பட்சத்தில் ஏலப்பொருட்களை எடுத்துச்செல்ல உத்தரவு வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 5531/2020/இ1

<u>தீர்மானம் :</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.1277</u>

பொருள்16: அருப்புக்கோட்டை நகராட்சி குடிநீர் வழஙகிவரும் நகராட்சிக்கு சொந்தமான திருப்புவனம் தலைமை நீரேற்றம், கட்டஙகுடி நீர் உந்து நிலையம் மற்றும் அலுவலக வளாகத்தில் உள்ள தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்ட நீர் உந்து நிலையஙகளின் முறையே 30HP, 60HP, 25HP, 15HP, 7.5HP மற்றும் 5HP மின்மோட்டார் பம்பு செட்டுகள் இயக்கத்தில் உள்ளன. மேற்படி நிலையஙகளில் இயஙகிவரும் மின்மோட்டார் பம்பு செட்டுகள் தொடர் இயக்கத்தில் இருந்தால் மட்டுமே நகருக்கு சீரான குடிநீர் வழஙக இயலும். ஆதலால் மேற்படி மின்மோட்டார் பம்பு செட்டுகளுக்கு தேவையான மின் உபகரணஙகள் புதியதாக வாஙகி அவ்வப்போது தேவைக்கு ஏற்ப பயன்படுத்திட அனுமதிக்கும் மேற்படி மின் உதிரி பாகஙகள் வாஙகிட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.75 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :—</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.9103/2021/இ1

<u>தீர்மானம் :</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.1278</u>

பொருள்17: அருப்புக்கோட்டை நகராட்சி சுக்கிலநத்தம் ரோட்டில் அமைந்துள்ள குப்பைகிடஙகில் உள்ள Processing Unit Machineries ஐ இயக்குவதற்கு மின் இணைப்பு பெறுவதற்கு புதியதாக வயரிங மற்றும் பேனல் போர்டும் காண்டாக்ட் செட், Ammeter புதியதாக பொருத்துவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.4.50 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :—</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.9133/2021/இ1

<u>தீர்மானம் :</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.1279</u>

**பொருள்18:** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான TN 67 A9212 குடிநீர் வாகனத்தின் தகுதிச்சான்று **08.09.2021** தேதியுடன் முடிவடைகிறது. எனவே மேற்கண்ட வாகனத்திற்கு FC பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுது பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.**90000/–** ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மேற்படி குடிநீர் வாகனம் நகரின் விரிவாக்க பகுதிகளில் மெயின் குழாய் பதிக்கப்படாத (Distributoion main) பகுதிகளில் உள்ள மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்துவருவதால் வாகனத்தின் அவசர அவசியம் கருதி பழுது பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் பின்னேற்பு பெற்று தகுதிச்சான்று புதுப்பிக்கவும், பழுதுபணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.**8875/2021/**இ**2**

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.1280</u>**

**பொருள்19:** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான TN67B8965 குடிநீர் வாகனத்தின் தகுதிச்சான்று **08.09.2021** தேதியுடன் முடிவடைகிறது. எனவே மேற்கண்ட வாகனத்திற்கு FC பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுது பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.**84,000/–** ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மேற்படி குடிநீர் வாகனம் நகரின் விரிவாக்க பகுதிகளில் மெயின் குழாய் பதிக்கப்படாத (Distributoion main) பகுதிகளில் உள்ள மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்துவருவதால் வாகனத்தின் அவசர அவசியம் கருதி பழுது பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் பின்னேற்பு பெற்று தகுதிச்சான்று புதுப்பிக்கவும், பழுதுபணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.**8447/2021/**இ**2**

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.1281</u>**

**பொருள்20:** அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகன எண் TN 67 AB 6892 வாகனத்திற்கு பழுது பணிகள் மேற்கொண்டு தகுதிச்சான்று புதுப்பித்து தர கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின்படி ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.**145000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | SDHGURU MOTORS Lot No 56, Priyanka Nagar, Kovilpappadkudi, Madurai | Rs.145470/- |
| 2 | SRI SAKTHI VINAYAKGAR AUTOMOBILES, 19, Shivashanmugam Pillai Street, Shenay Nagar, Madurai | Rs.158609/- |
| 3 | A.S.R.BODY WORKS Plot 17, 18, 19 Udhayam Nagar Main Road, Kovilpapakudi, Madurai | Rs.143803/- |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழஙகிய அரசு அஙகீகாரம் பெற்ற A.S.R.BODY WORKS, Madurai நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.8292/2021/எச்1

தீர்மானம் :

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தீர்மான எண்.1282

பொருள்21: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவின் பயன்பாட்டில் இருந்து வரும் வாகன எண் TN 67AB 6892 டம்பர் பின் வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுபித்து வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்வதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ.145000/—ஆகும். மேற்படி வாகனமானது நகர் பகுதிகளில் செல்வதால் தேய்மானம் அதிகமாக உள்ளது. என வஇந்த கூடுதல் செலவீனத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் உரிய பின்னேற்பு பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :—

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.8292/2021/எச்1

தீர்மானம் :

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தீர்மான எண்.1283

பொருள்22: அருப்புக்கோட்டை முதல் நிலை நகராட்சியானது 14.96 ச.கி.மீ பரப்பளவு கொண்டு 36 வார்டுகள் உள்ளடக்கியது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி 87722 ஆகும். தற்போதைய 2020ன்படி மக்கள் தொகை சுமார் 98000 ஆகும். அருப்புக்கோட்டை நகராட்சிக்கு குடிநீர் ஆதாரமாக திருப்புவனத்திலிருந்து வைகை குடிநீர் திட்டம் மற்றும் வல்லநாடு பகுதிலிருந்து தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டம் ஆகிய இரண்டு திட்டஙகள் மூலம் கிடைக்கும் குடிநீரினை கொண்டு அருப்புக்கோட்டை நகர் பகுதிக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 90 LPCD வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தற்போதைய மக்கள் தொகைக்கு ஏற்ப 135 LPCD வீதம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ள சீவலபேரி பகுதியில் இருந்து புதிய தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இந்நிலையில் நகரின் வளர்ச்சியை மேம்படுத்த நகரின் அனைத்து குடியிருப்புகளிலும் இருந்து வெளியேறும் கழிவு நீரினை பாதாளசாக்கடை மூலம் பாதுகாப்பான முறையில் சுத்திகரிப்பு செய்யும் திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்த பாதாளசாக்கடை திட்ட பிரேரணனைக்கான மதிப்பீடு தயார் செய்யவும். மேலும் அதற்குண்டான கட்டணத்தை செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :—

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் மற்றும் விரிவாக்க பகுதிகளில் பயன்படுத்தப்படும் கழிவு நீரினை கொண்டு செல்வதற்கு ஏதுவாக பொதுமக்களின் நலன் மற்றும் தேவையை கருதி மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்த அனுமதி வழஙகலாம். ந.க.எண்.7476/2017/இ1

தீர்மானம் :

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தீர்மான எண்.1284

பொருள்23: அருப்புக்கோட்டை முதல் நிலை நகராட்சியானது 14.96 ச.கி.மீ பரப்பளவு கொண்டு 36 வார்டுகள் உள்ளடக்கியது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி 87722 ஆகும். தற்போதைய 2020ன்படி மக்கள் தொகை சுமார் 98000 ஆகும். அருப்புக்கோட்டை நகராட்சி பகுதியில் உள்ள கீழ்கண்ட நீர் நீலைகளை இணைத்து புணரமைப்பு செய்து நீர் மேலாண்மை செய்து நகரத்தின் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தும் பணியினை Jal Jeevan mission (Urban) or AMRUT 2.0 திட்டத்தின் கீழ் மத்திய அரசின் வீடுகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சக நிதியின் கீழ் பணி மேற்கொள்ளவும் மேலும் சம்மந்தப்பட்ட துறைகளிடம் உரிய அனுமதி பெற கடிதம் அனுப்பவும், அதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்ய கலந்தாலோசகரை நியமனம் செய்யவும் ஆகும் செலவு தொகையை நகராட்சி நிதி அல்லது நகர்மன்ற நிர்வாக இயக்குநரக திட்ட ஒதுக்கீடு நிதியின் கீழ் பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **பொதுப்பணித்துறை** | |
| 1. | பாப்பானகுளம் கண்மாய் |
| 2 | தும்பைகுளம் கண்மாய் |
| 3 | பெரிய கண்மாய் ராமசாமி புரம் அருகில் |
| 4 | செவல்கண்மாய் புளியம்பட்டி |
| **வருவாய்த்துறை** | |
| 1 | அமிர்தானந்தமாயி காலனி |
| 2 | செஙகோட்டை ஊரணி |
| **இந்து அறநிலையத்துறை** | |
| 1 | பிரமடை ஊரணி |
| 2 | இந்து அறநிலையத்துறை தெப்பம் |
| **தனியார்** | |
| 1 | ஆயிரம் கண்மாரியம்மன் கோவில் தெப்பம் |
| 2 | கம்மவார் தெப்பம் |
| 3 | கம்மவார் கண்மாய் |
| 4 | நாடார் தெப்பம் எஸ்.பி.கே. கல்லூரி ரோடு |

**அலுவலகக் குறிப்பு :–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நீர்நிலை மேம்படுத்தலை கருத்தில் கொண்டும் நீர் நிலை ஆதாரஙகளை பெருக்கும் பொருட்டும் மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.9134/2021/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1285**

**பொருள்24:** மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர் அவர்களின் கடிதம் எண் 362/செ.ம.தொ.அ/2020 நாள் 25.08.2020ன் படி அருப்புக்கோட்டை நகராட்சியில் நடைபெறும் வளர்ச்சி திட்டப்பணிகளை தொழில்மலர் – 2020ல் விளம்பரம் செய்தததற்கு உரிய செலவுத்தொகை ரூ.10500/– ஐ மாலை முரசு, மதுரை நிறுவனத்திற்கு வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2775/2020/ இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1286**

**பொருள்25:** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் மேற்கூரையில் உள்ள தட்டோடு பகுதியானது மழையினால் சேதமடைந்து மழைநீர் இறஙகுவதால் Ceiling பூச்சுகள் அடிக்கடி உதிர்ந்து விடுவதனால் பயணிகள் பாதுகாப்பு கருதி உடைந்த பகுதிகளில் உள்ள தட்டோடு மற்றும் மேற்படி பூச்சு பூசுவதற்கு இடம் பார்வையிடப்பட்டது. மேற்கண்ட பணிகளை புதிய பேருந்து நிலையத்தில் மேற்கொள்ள உத்தேச மதிப்பிடு ரூ.4.50 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.9106/2021/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1287**

**பொருள்26:** இந்நகராட்சியின் 2020-2021ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் ஒப்புதல் வழஙகலாம். ந.க.எண்.8805/2021/சி1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.1288</u>**

**பொருள்27:** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் பொது சுகாதார துப்புரவு பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி செயல்முறை உத்தரவு ந.க.எண்.11734/2015/எச்1 நாள் 24.07.2020 மூலம் M/s.Malar Clean and Green Pvt., Ltd., தனியார் நிறுவனத்திற்கு 01.08.2020 முதல் 31.07.2021 முடிய உள்ள காலத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவில் 60 பணியாளரை கொண்டு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கு உண்டான செலவின தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க இந்நகர்மன்ற தீர்மான எண் 975 நாள் 24.07.2020 அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு 31.07.2021ல் முடிவடைய உள்ளது. மேலும் இந்நகராட்சி பொது சுகாதார துப்புரவு பணியினை தனியார் நிறுவனத்தின் மூலம் நடத்தி கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களது செயல் முறை உத்தரவு ஒ.மு.எண்.28369/ஜெ3/2018 நாள் 04.12.2018 மூலம் வழங்கப்பட்ட உத்தரவு 03.12.2021 அன்றுடன் முடிவடைய உள்ளது. மேற்படி தனியார்மயம் மூலம் பொது சுகாதார துப்புரவு பணியினை மேற்கொள்வதற்கு காலநீட்டிப்பு வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பிரேரனணை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. தற்பொழுது இந்நகரப்பகுதியில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்காகவும் மற்றும் பொதுசுகாதார துப்புரவு பணிமேற்கொள்ளுவதற்கும் போதுமான நிரந்தர தூய்மை பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் M/s.Malar Clean and green Pvt., Ltd., நிறுவனத்தின் மூலம் மேற்படி துப்புரவு பணியினை மேற்கொள்ள துப்புரவு ஆய்வாளர் மற்றும் நகர்நல அலுவலர் (பொ) அவர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். எனவே இந்நகராட்சியின் பொதுசுகாதார துப்புரவு பணிகள் மற்றும் கொரோனா நோய் தடுப்பு அத்தியாவசிய பணிகளை முன்னிட்டு மேற்படி தனியார் நிறுவனத்தின் மூலமாக 01.08.2021 முதல் 30.11.2021 முடிய உள்ள காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட உத்தரவின் படி 60 தூய்மை பணியாளர்களை கொண்டு 2020–2021 ஆண்டு தினசரி ஊதிய விலைவிகிதத்தில் பணி உத்தரவினை புதுப்பித்து வழங்கவும் அதற்குரிய செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.11734/2015/எச்1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.1289</u>**

**பொருள்28:** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் தனியார்மயம் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ள விதிக்கப்பட்ட அரசாணையின்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 32050/2016/ஜே2, நாள் 26.10.2017ல் அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் M/s.Malar Clean and Green Pvt Ltd., தனியார் நிறுவனத்தின் மூலம் 10 பணியாளரை கொண்டு மேற்படி பள்ளிகளுக்கு சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தது. மேற்படி தனியார் நிறுவனத்திற்கு இந்நகர்மன்ற அனுமதி எண் 976, நாள் 24.07.2020ன்படி இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.9624/2017/எச்1, நாள் 24.07.2020 மூலம் 01.08.2020 முதல் 31.07.2021 முடிய மேற்படி சுகாதார பணிகளை மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவு 31.07.2021 உடன் முடிவடைய உள்ளதாலும் மேலும் M/s.Malar Clean and Green Pvt Ltd., தனியார் நிறுவனம் பள்ளிசுகாதாரப் பணியினை தானே பார்த்து வர விருப்பம் தெரிவித்துள்ளது. தற்பொழுது கொரோனா நோய் பரவிவரும் சூழ்நிலையில் பள்ளி மாணவர்களின் சுகாதாரம் மற்றும் அத்தியவசியத்தினை கருதி 10 தூய்மை பணியாளர்களை கொண்டு 2020–2021 ம் ஆண்டு தினசரி ஊதிய விலைவிகிதத்தில் 01.08.2021 முதல் 31.10.2021 முடிய மூன்று மாதத்திற்கு மட்டும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது உத்தரவினை எதிர்நோக்கி புதுப்பித்து வழங்க நகர் நல அலுவலர்(பொ) தன்னுடைய 19.07.2021ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அதற்குரிய செலவினத்தொகையினை கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.1290</u>**

ந.க.எண்.9624/2015/எச்1

**பொருள்29:** விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சியின் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 87722 ஆகும். இந்நகராட்சியில் மொத்தம் 36 வார்டுகள் உள்ளன. நகரின் மொத்த பரப்பளவு 14.96 சதுர கி.மீ, சாலைகளின் மொத்த நீளம் 104.56 கி.மீ. இந்நகராட்சியில் இரண்டு பேருந்து நிலையங்கள் உள்ளன. புதிய பேருந்து நிலையம் Grade B தரநிலையிலும் மற்றும் பழைய பேருந்து நிலையம் Grade C தரநிலையிலும் செயல்படுகிறது. தூத்துக்குடி மற்றும் திருச்செந்தூரிலிருந்து மதுரை செல்லும் பேருந்துகள் அருப்புக்கோட்டை பைபாஸ் சாலை வழியாக செல்வதால் அருப்புக்கோட்டை நகர் பகுதி மற்றும் கிராம பகுதியில் இருந்து வரும் பொதுமக்களுக்கு பயன்பெறும் வகையில் பேருந்துகள் பைபாஸ் சாலை(NH45B)யில் நின்று செல்வதற்கு ஏதுவாக பைபாஸ் சாலையில் அமைந்துள்ள நேருநகர் பகுதியில் அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதியதாக பேருந்து நிறுத்துமிடம் ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுக்குழுமம் (IUDM) 2018 – 19 ன் கீழ் G.O.(Ms).No.82 Dt.23.08.2018 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி பணி மேற்கொள்ள 23.01.2019ம் தேதி ஒப்பந்தம் கோரப்பட்டு ஒப்பந்தத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்களில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரரான திரு.D.சிவகுமார் அவர்களுக்கு பணி மேற்கொள்ள 01.02.2019 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு ரூ.84.12 இலட்சத்திற்கு செலவீனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட பேருந்து நிறுத்துமிடம் அமைந்துள்ள இடம் நான்குவழி சாலையாக பொதுமக்கள் அதிகம் கூடும் இடமாக வெளிச்சம் குறைவாக இருப்பதனால் மின்விளக்கு அமைப்பது அவசியமாகும். எனவே மேற்கண்ட பேருந்து நிறுத்துமிடத்தில் 9 மீட்டர் உயரம் உள்ள மின் விளக்குகள் அமைப்பதற்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாததால் பொதுமக்கள் நலன் கருதி இப்பணி மேற்கொள்ளவும் மேலும் NH47 பிரிவு சாலை (Service Road) மட்டத்திற்கு பேருந்து நிலையத்தின் Basement யை உயரத்த வேண்டியிருந்ததால் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டதைவிட கூடுதலாக Centering, Fabrication of Steel & M20 mix Concrete கலவை பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே கூடுதலாக மேற்கொண்ட இப்பணிக்கும் தற்போது புதியதாக அமைக்க இருக்கும் 9 மீட்டர் உயரம் உள்ள மின் விளக்கு அமைக்கும் பணியினை மதிப்பீட்டிற்குள் முடிப்பதற்கு Work Slip தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பணிக்கான work slip க்கு தலைமை பொறியாளர், O/o.CMA, சென்னை அவர்களிடம் அனுமதி பெறுவதற்கும் பணி மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.5515/2018/ இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.1291**